## சுருக்கம்

வனத்துறை – வனத்துறையில் பணியாளர்களை நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்தல் – தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் (Tamil Nadu Forest Uniformed Services Recruitment Committee) அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வ–2)துறை**

**அரசாணை (நிலை)எண்.157** **நாள்: 29.06.2012**

**படிக்கப்பட்டவை:**

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடித எண்.ஆ2/ 53122/2009,
நாள் 12.04.2011 மற்றும் 05.08.2011.

******

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் தமிழ்நாடு வனத்துறையில், தற்போதுள்ள நடைமுறை விதிகளின்படி, வனவர் (Forester) / வனக்காப்பாளர் (Forest Guard) / வனக்காப்பாளர் (ஓட்டுநர் உரிமத்துடன்) (Forest Guard with Driving licence) மற்றும் வனக்காவலர் (Forest Watcher) ஆகிய பதவிகளுக்கான நேரடி நியமனங்களுக்கு முறையே மண்டல மற்றும் மாவட்ட அளவில் வேலை வாய்ப்பகங்களை அணுகி தகுதியுடைய நபர்களின் பட்டியலை நியமன அலுவலர்களால் (Appointing Authority) கோர வேண்டியுள்ளது என்றும், காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு அரசு தடை இருந்ததன் காரணமாக மேற்படி பதவிகளுக்கான அனைத்து காலிப்பணியிடங்களும் பதவி உயர்வின் மூலமாகவே நிரப்பப்பட்டது என்றும், இதனால் தற்போது மேற்படி பணியிடங்களில் பணிபுரிவோரின் சராசரி வயது 50 ஆக உள்ளது என்றும், மேலும் தற்சமயம் வேலை வாய்ப்பகத்தால் முதுநிலை (Seniority) அடிப்படையில் நேரடி நியமனத்திற்கென பரிந்துரைக்கப்படும் நபர்கள் அதிக பட்ச வயதில் உள்ளமையால், துறைக்கு தேவைப்படும் துடிப்பான இளைஞர்கள் கிடைப்பதில்லை எனவும், அதேபோன்று மேற்படி பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்க வேலை வாய்ப்பகம் மூலம் தகுதியான நபர்கள் பெறுவதில் மிகுந்த கால விரயமும், நிர்வாகச் சிக்கல்களும் ஏற்பட்டு பணியிடங்கள் நிரப்பப்பட முடியாத சூழல் நிலவி வருகிறது எனவும், எனவே மாவட்ட வேலை வாய்ப்பகங்களுக்குப் பதிலாக ‘‘தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் மைய தேர்வுக் குழுமம்’’ (Tamil Nadu Forest Uniformed Services Central Recruitment Committee) என்ற அமைப்பை அமைத்து அதன் மூலம் தெரிவு செய்யும் பட்சத்தில் நன்கு படித்த உடற்தகுதியுடைய இளைஞர்களைத் தெரிவு செய்ய சாத்தியக்கூறு அதிகமாக உள்ளது எனவும், எனவே வனத்துறையில் வனவர், வனக்காப்பாளர், வனக்காப்பாளர்(ஓட்டுநர் உரிமத்துடன்) மற்றும் வனக்காவலர் பதவிகளுக்கு பணியாளர்களை தெரிவு செய்ய ‘‘தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் மைய தேர்வுக் குழுமம்’’ (Tamil Nadu Forest Uniformed Services Central Recruitment Committee) என்ற அமைப்பை ஏற்படுத்தி ஆணை வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

**(த.பி.பா.)**

2. 15.05.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 110—ன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

''காவல்துறைக்கு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழு மூலம் அலுவலர்கள் தேர்ந்தெடுப்பதை போல தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம் மூலம் வனத்துறைக்கு தேவைப்படும் வனவர் (Forester) / வனக்காப்பாளர் (Forest Guard) / ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் (Forest Guard with Driving licence) மற்றும் வனக்காவலர் (Forest Watcher) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.''

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலரது செயற்குறிப்பை ஏற்று, வனத்துறையில் உள்ள வனவர், வனக்காப்பாளர், வனக்காப்பாளர்(ஓட்டுநர் உரிமத்துடன்), வனக்காவலர் ஆகிய பதவிகளுக்கான நபர்களை உடனடியாகவும், வருங்காலங்களில் வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு ரப்பர் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மற்றும் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் ஆகியவற்றில் ஏற்படும் காலிப் பணியிடங்களை தெரிவு செய்ய ''தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்'' (Tamil Nadu Forest Uniformed Services Recruitment Committee) என்ற அமைப்பை ஏற்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

4. மேலும் இந்த தேர்வுக் குழு ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் உள்ள பின்வரும் அலுவலர்களைக் கொண்டு தனி அமைப்பாக செயல்பட வேண்டும்.

அ) தேர்வுக்குழு

| | | |
|---|---|---|
| 1) | கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் நிலையில் | – தலைவர் |
| 2) | சம்பந்தப்பட்ட அரசு கழகங்களின் நிர்வாக இயக்குநர் அல்லது அவரால் பரிந்துரைக்கப்படும் அலுவலர் | – உறுப்பினர் |
| 3) | தலைமை வனப்பாதுகாவலர் நிலையில் | – உறுப்பினர் |
| 4) | வனப்பாதுகாவலர் நிலையில் | – உறுப்பினர்/செயலர் |

ஆ) நிர்வாக பிரிவு

1) வனச்சரகர்கள் – 2
2) வனவர்கள் – 2
3) ஓட்டுநர் – 1

இ) அலுவலகப் பிரிவு

1) நேர்முக உதவியாளர் – 1
2) கண்காணிப்பாளர் – 1
3) உதவியாளர் – 2
4) இளநிலை உதவியாளர் – 2
5) கணினி இயக்குபவர் – 1
6) அலுவலக உதவியாளர் –2

(த.பி.பா.)

மேலும், தேர்வுக்குழு தலைவர், உறுப்பினர் மற்றும் உறுப்பினர் செயலர் ஆகியோர் பகுதி நேரப் பணியாளர்களாகவும் நிர்வாக மற்றும் அலுவலக பிரிவு பணியாளர்கள் மறு பகிர்வின் மூலம் முழு நேரப்பணியாளர்களாக செயல்பட வேண்டும். தேர்வு குழுவின் நடைமுறை நிர்வாகச் செலவிற்கு ஓராண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிதி வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1) | நாளிதழ்களில் விளம்பரம் செய்ய ஆகும் செலவு | : ரூ.1,00,000/– |
| 2) | கணினி மற்றும் அதன் தொடர்பான தேவைகள் | : ரூ.1,00,000/– |
| 3) | அலுவலக செலவினம் (தபால் மற்றும் இதர செலவினம்) | : ரூ.50,000/– |
| 4) | எதிர்பாரா செலவினம் | : ரூ.50,000/– |
| 5) | பயணச் செலவு (Travel Expenses) | : ரூ.1,00,000/– |
| | மொத்தம் | : ரூ.4,00,000/– |

மேற்சொன்ன செலவினத்தை கீழ்க்கண்ட சில்லறைச் செலவின தலைப்பின் கீழ் மேற்கொள்ள வேண்டும்.

"2406. 01. 001. AA.0521"

5. <u>அக்குழுமம் பின்வரும் நடைமுறைகளை கடைபிடிக்கும்:–</u>

I. மாநில அளவிலான வனவர், வனக்காப்பாளர், வனக்காப்பாளர் (ஓட்டுநர் உரிமத்துடன்) மற்றும் வனக்காவலர் பதவிகளில் நேரடி நியமனத்திற்கென ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள இட ஒதுக்கீடு சுழற்சி, கல்வி மற்றும் உடல் தகுதிகள், எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் தமிழ்நாடு வனச்சார்நிலைப் பணி விதிகள் மற்றும் அரசாணைகளின் படி, தேர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

II. மாநில அளவில் விண்ணப்பங்களைக் கோரி தேர்வு செய்யப்படவுள்ள பதவி மற்றும் அவற்றிற்குரிய தகுதி ஆகியவற்றை முன்னணியில் உள்ள தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதுடன், துறையின் இணையதளத்திலும் வெளியிட வேண்டும்.

III. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி (syllabus) எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல், உடல்தகுதி சரிபார்த்தல், நடை பயிற்சி தேர்வு ஆகியவை அடுத்தடுத்த நிலைகளாக நடத்தப்படும். ஒவ்வொரு நிலையிலும் தேர்ச்சி பெற்றோரே அடுத்த நிலைக்கு அனுமதிக்கப்படவேண்டும்

IV. மேற்கண்ட அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களை இறுதியாக தேர்ந்தெடுப்பதற்கு முன்பு, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

V. தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் மூலம் பணியாளர்களை தெரிவு செய்யப்படும் போது, முன்னாள் இராணுவத்தினருக்கு உடல் மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் தற்போதைய விதிகளின் படி முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

VI. இக்குழுமம் மூலமாக பணியாளர்களை தெரிவு செய்யும் முன்பு வேலை வாய்ப்பகத்திலிருந்து "ஆளின்மை சான்றிதழ்" பெறுவதிலிருந்து அரசு விலக்களிக்கிறது.

**(த.பி.பா.)**

VII. வனக்காவலர் பணியிடத்திற்கான நபர்களை மாநில முதுநிலைப் பட்டியலில் உள்ள நபர்களுக்கு பணி வழங்கிய பின்னர் மேற்கொள்ள வேண்டும்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 68324/கா.ப.(ம)மீ.வ/2012, நாள்.21.02.2012–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி.சங்கர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15.
அனைத்து தலைமை வனப்பாதுகாவலர்கள் / வனப்பாதுகாவலர்கள்.
அனைத்து மாவட்ட வன அலுவலர்கள்,
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு அமைச்சர்(வனம்), சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளர்,
சென்னை–9.
முதன்மைச் செயலாளர்,
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை–9.
அனைத்து பிரிவுகள்,
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை–9.
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை–9.
இ.கோ/உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்